THRU the BIBLE

வாக்குத்தத்தம் முதல் தெய்வீகத் தலையீடு வரை

பகுதி 4 - ஆதியாகமம் 18 - 24



சந்தியுங்கள் பகிருங்கள் வளருங்கள்

ஒன்றாகக் கூடுங்கள், படித்ததைப் பகிர்ந்துகொள்ளுங்கள்,
ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டுங்கள்



வாரம் ஒருமுறை

கூடிவரும்போது செய்ய வேண்டியவை



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு?



ஜெபத்துடன் தொடங்குங்கள்: நீங்கள் ஒவ்வொரு பாடத்தையும் படிக்கத் தொடங்குவதற்கு முன்னும், “கர்த்தாவே, இதைப் படிப்பதின் வாயிலாக, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அறிவிலும் வளர உதவுங்கள்” என்று ஜெபியுங்கள்.



கொடுக்கப்பட்ட வேதபகுதியை வாசியுங்கள்: தேவனுடைய வார்த்தையின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்காக உங்கள் கண்களைத் திறக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்: நீங்கள் படித்த பகுதியின் பொருள், பின்னணி, மற்றும் தனிப்பட்ட நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து சிந்திப்பதற்காக வழங்கப்பட்ட வேதவாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்.



ஒவ்வொரு பாடத்தைப் படித்த பிறகும் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்: வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைப் பற்றி சிந்தியுங்கள். ஒவ்வொரு போதனையைக் கற்றுக்கொண்ட பிறகும் தனிப்பட்ட சிந்தனைக் கேள்விகள் மற்றும் நடைமுறைக் கேள்விகளைப் பற்றி உங்கள் குழுவினருடன் கலந்து ஆலோசியுங்கள்.



டாக்டர் வெர்னோன் மெக்கியின் போதனைகளைக் கேளுங்கள்: டாக்டர் வெர்னோன் மெக்கியின் அனைத்துப் போதனைகளையும் படிக்க விரும்பினால் TTB.org என்று இணையதளத்துக்குச் சென்றோ அல்லது கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்தோ அல்லது யூடியூப்-ல் சென்றோ கேட்டும் வாசித்தும் கற்றுக்கொள்ளலாம்.



பரிந்துரைக்கப்படுகிற இடைநிறுத்தம் மற்றும் மறுதொடக்க ஐகானைப் பயன் படுத்தவும். இது அதனுடைய உள்ளடக்கத்தை கருத்துடனும் அதேவேளையில் உங்கள் சொந்த விருப்பத்திற்கு ஏற்றாற்போல் தொடர்ந்து படிக்கவும் வழிகாட்டும்.

உங்களுடைய சிந்தனைக்கு

வேத வாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் இந்தப் பாடத்தை எவ்வாறு பயன்படுத்துவது?	பக்கம் 2
ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை *(ஆதியாகமம் 18)*	பக்கம் 7
சோதோம் கொமோராவை விட்டு வெளியேறுதல் *(ஆதியாகமம் 19)*	பக்கம் 25
தீர்க்கப்படாத பாவம் *(ஆதியாகமம் 20)*	பக்கம் 45
வாக்குத்தத்தம் நிறைவேறியது *(ஆதியாகமம் 21)*	பக்கம் 57
விசுவாசம் சோதிக்கப்படுதல் *(ஆதியாகமம் 22 - 23)*	பக்கம் 73
ஈசாக்குக்கு ஒரு மணவாட்டி *(ஆதியாகமம் 24)*	பக்கம் 89


ஆசீர்வதிக்கப்பட்ட
வாழ்க்கை
ஆதியாகமம் 18

ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை


அன்புள்ள பரலோக பிதாவே,

நாங்கள் உம்முடைய வார்த்தையைத் தியானிக்கையில், எங்கள் இருதயங்களை ஒருமுகப்படுத்தி, எங்கள் மனக்கண்களைப் பிரகாசிப்பித்தருளும். இந்த வேதப்பகுதியை வாசிப்பதற்கு மட்டுமல்லாமல், உம்முடைய சுபாவத்தையும், நீதியையும், இரக்கத்தையும் ஆழமாய் அறிந்து கொள்ள எங்களுக்கு உதவிசெய்யும். உம்மோடு நெருங்கி நடக்கவும், மற்றவர்களுக்காக உமது சமூகத்தில் திறப்பிலே நிற்கவும், நியாயத்தீர்ப்பும் கிருபையும் சந்திக்கும் வேளையில் உம்மை முழுமையாய் விசுவாசிக்கவும் எங்களுக்குப் போதித்தருளும். நாங்கள் உம்மை உள்ளபடியே தரிசிக்கும் படியாக, எங்கள் சிந்தைகளைச் சீர்ப்படுத்தியருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்துதல்

ஆதியாகமம் 18:1-15



"ஆபிரகாம் தான் உண்மையில் யாரை உபசரிக்கிறார் என்பதை அறிந்திருக்கவில்லை; அவர் அறியாமலேயே தேவதூதர்களை உபசரித்தார்."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ



தேவன் ஆபிரகாமோடே பேசி பதினான்கு வருஷங்கள் கடந்துவிட்டன.

இப்பொழுது, மம்ரேயின் சமபூமியிலே பகலின் உஷ்ணவேளையில், பரலோகத்தின் மூன்று தூதர்கள் ஆபிரகாமிடத்திற்கு வந்தார்கள்.


தொண்ணூற்றொன்பது வயதான முதிர்வயதிலும், ஆபிரகாம் அவர்களை ஓடி எதிர்கொண்டு, தரைமட்டும் குனிந்து வணங்கினார். அவர் அப்பங்களையும், வெண்ணெயையும், பாலையும், சமைத்த இளங்கன்றுக்குட்டியையும் அவர்களுக்கு முன்பாக வைத்து, அவர்கள் சாப்பிடும்போது அவர்கள் அருகே மரத்தடியில் நின்றார். தான் பரலோக தூதர்களை உபசரிக்கிறோம் என்பதையும், அவர்களில் ஒருவர் கர்த்தர் தாமே என்பதையும் அவர் அறியாதிருந்தார்.

மற்றவர்களுக்குச் செய்யும் ஊழியமும் உபசரிப்புமே, தேவன் உங்களைச் சந்திக்கும் வழியாக இருக்கலாம் என்பதை நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

ஆவிக்குரிய சத்தியங்கள்




தேவனோடிருக்கும் ஐக்கியத்திற்கு வயதோ, பெலவீனமோ, சூழ்நிலைகளோ தடைகளல்ல.



தேவனோடிருக்கும் ஐக்கியம் மனத்தாழ்மையையும், உதாரகுணத்தையும், ஆயத்த மனதையும் உருவாக்குகிறது.

போஜனம்பண்ணி முடிந்த பின்பு, கர்த்தர்: "உன் மனைவியாகிய சாராள் எங்கே?" என்று கேட்டு, தமது **வாக்குத்தத்தத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறார்**.

கூடாரவாசலில் நின்றுகொண்டிருந்த சாராள் இதைக் கேட்டு, தன் உள்ளத்திலே நகைத்தாள். 'இது நடப்பதற்கு சாத்தியமே இல்லை' என்கிற எண்ணத்தினால் உண்டான நகைப்பு இது. ஆனால் இருதயத்தின் ஆழத்தில் எழும் சத்தமில்லாத நகைப்பையும் கர்த்தர் அறிந்து, கனிவாக அவளைக் கேட்கிறார்.



கர்த்தருடைய கேள்வியைக் கேட்டு சாராள் பயந்து, தான் நகைக்கவில்லை என்று மறுக்கிறாள்; ஆனால் **அவளால் உண்மையை மறைக்க முடியவில்லை**.

அந்தக் கேள்வி சாராளை ஏன் பயமுறுத்தியது?

ஆவிக்குரிய சத்தியங்கள்



மனித விசுவாசத்தின் பலவீனத்தை தேவன் அறிவார். அவர் நம்முடைய **சந்தேகத்தை சந்தோஷமாகவும்**, நம்முடைய **பயத்தை நிறைவாகவும் மாற்றுகிறார்**.



தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய விசுவாசத்தைச் சார்ந்தவைகள் அல்ல, அவை **அவருடைய வார்த்தையையே** சார்ந்திருக்கின்றன. குறித்த காலத்திலே, நிறைவேறும்வரை அவருடைய வார்த்தை ஒருபோதும் தவறாது.



தேவனோடிருக்கும் ஐக்கியம் என்பது **சத்தியத்தையும், தாழ்மையையும், அன்பான கண்டித்து உணர்த்துதலையும்** உள்ளடக்கியது.



சாராளின் மறைவான நகைப்பு, பின்னர் **சந்தோஷத்தின் சாட்சியாக** மாறுகிறது. வாக்குத்தத்தத்தின் பிள்ளைக்கு ‘ஈசாக்கு’ என்று பேரிடப்படும்; அதற்கு ‘நகைப்பு’ என்று அர்த்தம்.

சிந்தித்தல்

கேள்வி 1

ஆபிரகாம் உபசரிப்பதற்குக் காண்பித்த ஆயத்தமும் ஆர்வமும், தேவனோடு ஐக்கியமாயிருக்கும் ஓர் இருதயத்தைக் குறித்து என்ன வெளிப்படுத்துகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 2

உங்கள் வாழ்க்கையில் உங்களுக்குக் அசாத்தியமாகத் தோன்றும் சில சூழ்நிலைகளை எழுதுங்கள்.

நீங்கள் எழுதிய அந்தச் சூழ்நிலைகளை வாசித்துப் பார்த்து, அவற்றில் தேவனால் செய்யக்கூடாதவைகள் என்று ஒன்றுமே இல்லை என்பதை விசுவாசித்து, அந்தப் பட்டியலை கோடிட்டு அடித்துவிடுங்கள்.

தேவன் தமது நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துகிறார்

ஆதியாகமம் 18:16-21



"தேவன் செய்வது யாவும் சரியானது; அவர் செய்வது சரியல்ல என்று நீங்கள் நினைத்தால், குறை தேவனிடம் இல்லை, உங்களிடமே இருக்கிறது."

வந்திருந்த புருஷர்கள் எழுந்து புறப்படும்போது, ஆபிரகாம் அவர்களை வழிவிட்டனுப்ப அவர்களோடே கூடப்போனான். அந்த உயர்ந்த சமவெளியிலிருந்து கீழே பார்த்தால் சோதோம், கொமோரா பட்டணங்கள் தெரிந்தன. அப்பொழுது கர்த்தர் தமக்குள்ளே:

"நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" ஆதியாகமம் 18:17

தேவன் தமது திட்டத்தை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்த விரும்பியதற்கான காரணங்களை அவர் இவ்வாறு கூறுகிறார்:

ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவான்.

அவனுக்குள் பூமியிலுள்ள ஜாதிகள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.


ஆபிரகாமின் செல்வாக்கு தலைமுறை தலைமுறையாகத் தொடரும்.

அவன் தன் வீட்டாருக்கு நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கும்படி கட்டளையிடுவான்.

தேவனுடைய சுபாவத்தை ஆபிரகாம் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.



சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருக்கிறது என்றும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருக்கிறது என்றும் கர்த்தர் விளக்குகிறார். அவர் "இறங்கிப்போய்ப் பார்த்து அறிவேன்" என்று சொல்வது, **அவரது பூரணமான நீதியையும் பொறுமையையும் காட்டுகிறது. அவர் ஒருபோதும் அவசரப்பட்டு நியாயத்தீர்ப்பு வழங்குவதில்லை.**



சிந்தித்தல்

கேள்வி 1

தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் புரிந்துகொள்வதற்கு முன்பு, அவருடைய சுபாவத்தைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியம்?

செயல்படுத்துதல்

கேள்வி 2

நம்மைச் சுற்றியுள்ள உலகம் அநீதியாலும் அக்கிரமத்தாலும் நிறைந்திருக்கிறது. சில நேரங்களில் தேவனுடைய கோபாக்கினை இதில் தலையிட வேண்டும் என்று நாம் நினைக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், நாம் எவ்வாறு பாவத்தை எதிர்த்து நிற்கலாம் மற்றும் அநீதியால் பாதிக்கப்படும் மக்களுக்காக எவ்வாறு குரல்கொடுக்கலாம் என்பதை எழுதுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

ஆபிரகாம் தேவனுக்கு முன்பாகப் பரிந்துபேசுகிறார்

ஆதியாகமம் 18:22-33

அந்தத் தூதர்கள் சோதோமை நோக்கிப் போகும்போது, ஆபிரகாம் இன்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தார். அப்போது மிகவும் வியக்கத்தக்க ஒரு உரையாடல் நிகழ்கிறது. ஆபிரகாம் பரிந்துபேசுகிறார் -

"துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ?" ஆதியாகமம் *18:23*

அவர் ஐம்பது நீதிமான்களிலிருந்து தொடங்கி, நாற்பத்தைந்து, நாற்பது, முப்பது, இருபது, முடிவாக பத்து பேர் வரைக்கும் இறங்கி வந்து வேண்டுதல் செய்கிறார். ஒவ்வொரு முறையும், அந்தச் சில நீதிமான்களினிமித்தம் பட்டணத்தை அழிக்காதிருப்பேன் என்று தேவன் சம்மதிக்கிறார்.

பரிந்துபேசுதல் என்பது தேவனோடிருக்கும் ஐக்கியத்திலிருந்தே பிறக்கிறது. ஆபிரகாம் தேவனோடு தர்க்கம் பண்ணவில்லை; அவர் தேவனுடைய சுபாவத்தை நோக்கியே விண்ணப்பம் பண்ணுகிறார்.



ஆபிரகாம் தேவனுடைய நீதியையும் இரக்கத்தையும் நோக்கி–

"சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ?" ஆதியாகமம் *18:25*

ஆபிரகாம் பத்து பேரோடு நின்றுவிட்டாலும், தேவனுடைய இரக்கம் அதற்கும் மேலாகச் செல்கிறது. அவர் துன்மார்க்கனோடே நீதிமானை அழிப்பதில்லை. நியாயத்தீர்ப்பு வந்தபோது, அக்கினி இறங்குவதற்கு முன்பாகவே அவர் லோத்தைப் பாதுகாப்பாய்ப் புறப்படப்பண்ணுகிறார்.

இது, **திருச்சபையானது தேவனுடைய கோபாக்கினையைச் சந்திக்காது** என்ற சத்தியத்திற்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறது - ஏனென்றால் நமக்கான நியாயத்தீர்ப்பு கிறிஸ்துவின் மேல் ஏற்கனவே சுமத்தப்பட்டுவிட்டது.

தேவனுடைய
நீதியும் இரக்கமும்
கிறிஸ்துவிலேயே பரிபூரணமாகச்
சந்திக்கின்றன

சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

கேள்வி 1

பாவத்தை நியாயம் தீர்ப்பதில் தேவனுடைய நீடிய பொறுமையையும் நீதியையும் குறித்து இப்பகுதி என்ன போதிக்கிறது?

கேள்வி 2

யாருக்காகத் தொடர்ந்து பரிந்துபேசும்படி தேவன் உங்கள் இருதயத்தில் பாரத்தை வைக்கிறார்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

முக்கிய குறிப்புகள்

1. சோதோம் கொமோரா பட்டணங்கள், நியாயத்தீர்ப்புக்குள்ளான ஓர் உலகத்தை சித்தரிக்கின்றன.

2. இன்றைய உலகத்தின் ஒழுக்கநிலை சோதோமை ஒத்திருக்கிறது, ஆனாலும் அது கிறிஸ்துவினுடைய வருகையின் காலத்தை நிர்ணயிப்பதில்லை.

3. திருச்சபை தேவனுடைய கோபாக்கினையை அனுபவிக்காது:
   - கிறிஸ்து நம்முடைய நியாயத்தீர்ப்பைச் சுமந்துவிட்டார்.
   - நியாயத்தீர்ப்பு வருமுன்னே தேவன் நீதிமான்களை விலக்கிக் காப்பாற்றுகிறார்.

4. தேவனுடைய சுபாவம் வேதாகமம் முழுவதிலும் மாறாததாகவே இருக்கிறது.

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“விசுவாசிகளில் இரண்டு வகையார் உள்ளனர்: தேவனோடு ஐக்கியமாயிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்பவர்கள் மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு வெளியே சென்று அழிவுக்குள்ளான வாழ்க்கையை வாழ்பவர்கள். நீங்கள் எங்கே நிற்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதிலேயே இந்த வித்தியாசம் அடங்கியிருக்கிறது.”


சோதோம்
கொமோராவை விட்டு
வெளியேறுதல்
ஆதியாகமம் 19

சோதோம் கொமோராவை விட்டு வெளியேறுதல்


அன்புள்ள பரலோக பிதாவே,

ஆண்டவரே, நாங்கள் உம்முடைய வார்த்தையை வாசிக்கும்போது தெளிவான இருதயத்தையும் உண்மையுள்ள ஆவியையும் தந்தருளும். இந்த அதிகாரம் எங்களது சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது; இதைச் சரியாகப் புரிந்துகொள்ள உம்முடைய ஞானம் எங்களுக்குத் தேவை. உலகத்தோடு சமரசம் செய்துகொள்வதிலிருந்து எங்களைக் காத்தருளும், நீர் பாவத்தை வெறுப்பதுபோல நாங்களும் வெறுக்கப் போதித்தருளும், உம்மை மகிமைப்படுத்தும் வழியில் வாழ எங்களுக்கு உதவி செய்யும். ஆபிரகாமின் விசுவாசத்திலிருந்து மட்டுமல்ல, லோத்தின் வீழ்ச்சியிலிருந்தும் கற்றுக்கொள்ள கிருபை செய்யும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

சோதோமில் லோத்து – சமரசம் செய்யப்பட்ட ஒரு நிலை

ஆதியாகமம் 19:1-14



“இன்றும் இரட்சிக்கப்பட்ட அநேகர் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் வாழும் வாழ்க்கை முறையினாலும் வசிக்கும் இடத்தினாலும், தங்கள் குடும்பத்தையும், தங்கள் செல்வாக்கையும், தங்கள் சாட்சியையும் இழந்துபோகிறார்கள்.”

– டாக்டர் வெர்னோன் மெக்கீ

சாயங்காலத்திலே சோதோம் பட்டணத்து வாசலில் **இரண்டு தூதர்கள் வந்தார்கள்.** லோத்து அங்கே ஒரு வழிப்போக்கனைப் போல அல்ல, அந்தப் பட்டணத்தின் **வாழ்க்கையோடு ஒன்றிப்போனவனாக** வாசலில் உட்கார்ந்திருந்தான்.



பட்டணத்து வாசல் என்பது **அதிகாரமும் அரசியலும் நிறைந்த இடம்**, அங்கேதான் நியாயத்தீர்ப்புகள் வழங்கப்படும். வெகு காலத்திற்கு முன்பு, லோத்து சோதோமுக்கு நேராகத் தன் கூடாரத்தைப் போட்டான். இப்போது, **அந்த அமைப்பிற்குள் வசதியாக உட்கார்ந்திருக்கிறான்.**



அந்தத் தூதர்களைக் கண்டபோது லோத்தின் **உபசரிக்கும் சுபாவம் வெளிப்பட்டது.** அவன் சீக்கிரமாய் எழுந்து அவர்களை எதிர்கொண்டு, வீதியிலே இராத்தங்க வேண்டாம் என்று வற்புறுத்தினான். இரவில் அந்தப் பட்டணத்தில் இருக்கும் ஆபத்து அவனுக்குத் தெரியும்.

அவனுடைய இருதயம் நன்மை தீமையை அறிந்திருந்தாலும், அவனுடைய ஆவிக்குரிய உணர்வை மழுங்கடிக்கும் ஒரு சூழ்நிலையோடு அவனுடைய வாழ்க்கை பின்னிப் பிணைந்துவிட்டது. **தேவனோடிருக்கும் ஐக்கியத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் ஓர் இடத்தை** அவன் தெரிந்தெடுத்திருந்தாலும், வந்தவர்களுக்கு அவன் உபசரிப்பையும் தயவையும் காண்பிக்கிறான்.

சிந்தித்தல்

கேள்வி 1

சரீரப்பிரகாரமாக ஓரிடத்தில் இருந்துவிட்டு, ஆவிக்குரிய பிரகாரமாக அந்த இடத்திற்குப் பொருந்தாதவர்களாய் இருப்பதன் அர்த்தம் என்ன?

செயல்படுத்துதல்

கேள்வி 2

உங்கள் ஆவிக்குரிய உணர்வை மெதுவாக மழுங்கடிக்கக்கூடிய உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகள் அல்லது தாக்கங்கள் என்னென்ன என்பதை எழுதுங்கள்?.

ஆவிக்குரிய சத்தியங்கள்

நாம் வாழத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைகளால் தேவனோடிருக்கும் ஐக்கியம் பலவீனமடையக்கூடும்.

சமரசம் என்பது, அது வெளியில் தெரிவதற்கு வெகு காலத்திற்கு முன்பாகவே, சத்தமில்லாமல் தொடங்கிவிடுகிறது.


இரவு நெருங்கும்போது **சோதோமின் உண்மையான நிலைமை வெளிப்படுகிறது.** பட்டணத்தின் எல்லாப் பக்கங்களிலுமிருந்து இளைஞர் முதல் முதியவர் வரை லோத்தின் வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்கள் வந்த விருந்தாளிகளைத் தங்களுடைய பாலியல் இச்சைகளுக்கு உட்படுத்தும்படி கேட்டு ஆர்ப்பரித்தது, அந்தப் பட்டணத்தின் ஒழுக்கச் சீர்கேட்டின் ஆழத்தை வெளிப்படுத்தியது. **பாவம் அங்கே மறைவாக இல்லை; அது பகிரங்கமாகவும், மூர்க்கமாகவும், வெட்கமற்றதாகவும் இருந்தது.**



லோத்து அவர்களைச் சகோதரரே என்று அழைத்து கெஞ்சுகிறான், தன் விருந்தாளிகளைக் காப்பாற்றுவதற்காகத் தன் மகள்களை ஒப்புக்கொடுக்க முன்வருவது அவனுடைய பரிதாபகரமான தார்மீக சமரசத்தைக் காட்டுகிறது.

சோதோமில் வாழ்ந்த பல வருடங்கள் அவனுடைய பகுத்தறிவைச் சிதைத்துவிட்டது.

லோத்தை நீங்கள் எவ்வாறு நியாந்ததீர்ப்பீர்கள்? அந்த நேரத்தில் லோத்து செய்தது சரி என்றா அல்லது தவறு என்றா நினைக்கிறீர்கள்?



கூட்டத்தினர் அவனுக்கு விரோதமாகத் திரும்புகிறார்கள், பட்டணத்தில் அவனுக்கிருந்த அந்தஸ்து அவனுக்கு எந்த அதிகாரத்தையோ பாதுகாப்பையோ தரவில்லை என்பது நிரூபணமாகிறது.

தெய்வீகத் தலையீடு மட்டுமே அவனைக் காப்பாற்றுகிறது. தூதர்கள் லோத்தை உள்ளே இழுத்துக்கொண்டு, அந்த மனிதர்களுக்குக் குருட்டாட்டம் பிடிக்கப் பண்ணினார்கள். தேவனுடைய இரக்கம் இல்லாவிட்டால், லோத்து அந்தக் கூட்டத்தாரால் கொல்லப்பட்டிருப்பான்.



> தேவனுடைய பிள்ளையாக மாறிய பின்பும் தொடர்ந்து பாவத்தில் வாழலாம் என்பதே இன்றைய அநேகரின் எண்ணமாக இருக்கிறது. ஆனால் தேவனோ அது சாத்தியமில்லை என்கிறார்; அதற்கான சாட்சியாகவே சோதோம் நிற்கிறது.

ஆவிக்குரிய சத்தியங்கள்



தொடர்ந்து பாவத்தின் சூழ்நிலையில் இருப்பது தார்மீகத் தெளிவை மழுங்கடிக்கிறது.



சமரசம் செய்வது பகுத்தறிவையும் ஆவிக்குரிய தைரியத்தையும் பலவீனப்படுத்துகிறது.



தேவனுடைய இரக்கம் மட்டுமே பாவத்தின் விளைவுகளிலிருந்து நம்மை விடுவிக்கும்.

நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்று தூதர்கள் லோத்தை எச்சரித்து, அவனுடைய குடும்பத்தாரைச் சேர்த்துக்கொள்ளும்படி வற்புறுத்துகிறார்கள். லோத்து ஓடிச்சென்று, தன் மகள்களை விவாகம்பண்ணப்போகிற மருமக்களைப் பார்த்து, பட்டணத்தை விட்டுப் புறப்படக் கெஞ்சுகிறான். ஆனால் அவனுடைய வார்த்தைகள் அவர்களுக்குப் பரியாசமாகத் தோன்றின.

லோத்து சோதோம் மக்களைப் போலவே நெடுங்காலம் வாழ்ந்தபடியால் அவனுடைய வார்த்தைகளுக்கு அங்கு எந்த மதிப்பும் இல்லாமல் போனது. **அவன் சத்தியத்தைச் சொன்னாலும், அவனது வாழ்க்கை அந்தச் செய்திக்குச் சான்றாக அமையவில்லை.**

அவனுடைய சமரசம் அவனுடைய ஆவிக்குரிய செல்வாக்கை அழித்துவிட்டது. அவனுடைய சாட்சி பலனற்றதாகிவிட்டது, அவன் தேவனுக்காக ஒருவரையும் ஆதாயப்படுத்தவில்லை.



இந்த மனிதன் தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பான இடத்தில் வாழ்ந்தான், தேவனுக்காக அவனிடம் எந்தச் சாட்சியும் இல்லை. இந்தப் பட்டணத்தில் கர்த்தருக்காக அவன் ஒருவரையாவது ஆதாயப்படுத்தவில்லை. இது இன்றும் உண்மையாக உள்ளது. நண்பர்களே, நீங்கள் அவர்கள் நிலைக்கு இறங்கிச் செல்லும்போது, உங்களால் அவர்களை ஆதாயப்படுத்த முடியாது.

ஆவிக்குரிய சத்தியங்கள்



சமரசம் செய்யப்பட்ட வாழ்க்கை ஆவிக்குரிய அதிகாரத்தைப் பலவீனப்படுத்துகிறது.



செல்வாக்கு வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல, அது வார்த்தைள் மற்றும் செயல்களின் உண்மைத் தன்மையின் மூலம் கட்டியெழுப்பப்படுகிறது.



விசுவாசம் மறைக்கப்படும்போது, சாட்சி அதன் வல்லமையை இழக்கிறது.

செயல்படுத்துதல்

கேள்வி 1

நம் வாழ்வில் நாம் செய்யும் சமரசங்கள் மற்றவர்கள் முன்பாக நம்முடைய சாட்சியை எவ்வாறு பாதிக்கக்கூடும்?

இரக்கமும் அழிவும்

ஆதியாகமம் 19:15-29

விடியற்காலமானபோது, உடனடியாகப் புறப்படும்படி தூதர்கள் லோத்தை வற்புறுத்துகிறார்கள். அப்படியிருந்தும், அவன் தாமதிக்கிறான். அழிவு வாசற்படியில் வந்தபோதிலும், **விட்டுச் செல்ல லோத்து தயங்குகிறான்**. இறுதியாக, இரக்கத்தின் செயலாக, தூதர்கள் அவன் கையையும் பிடித்து வெளியே கொண்டுபோய் விடுகிறார்கள்.

தன் ஜீவன் தப்ப ஓடிப்போகவும், பின்னிட்டுப் பாராமலும், சமபூமியில் எங்கும் நில்லாமலும் மலைக்கு ஓடிப்போகவும் அவனுக்குக் கட்டளையிடப்படுகிறது. அப்படியிருந்தும் அவன் தயங்கி, மலைக்கு ஓடிப்போனால் தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன் என்று பயந்து, மலைக்குப் பதிலாக அருகிலுள்ள ஒரு சிறிய பட்டணத்திற்கு ஓடிப்போக அனுமதி கேட்கிறான்.

தேவன் அவனுடைய வேண்டுதலுக்குச் செவிகொடுத்து, **ஆச்சரியமான பொறுமையையும் கிருபையையும் காண்பிக்கிறார்**.

ஆவிக்குரிய சத்தியங்கள்

நம்முடைய விசுவாசம் பலவீனமாக இருக்கும்போது, தேவனுடைய இரக்கமே நம்மைச் சுமந்துசெல்கிறது.





கீழ்ப்படிதல் முழுமையற்றதாக இருந்தாலும்கூட, தேவன் விடுவிக்கிறார்.

செயல்படுத்துதல்

நீங்கள் முன்பு எழுதிய தாக்கங்களின் பட்டியலை மறுபடியும் பாருங்கள். அவைகளை விட்டு விலகி ஓடிப்போகும்படி தேவன் உங்களை அழைக்கிறாரா? நீங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்னென்ன என்பதை எழுதுங்கள்.

சூரியன் உதிக்கும்போது, கர்த்தரால் வானத்திலிருந்து சோதோமின்மேலும் கொமோராவின்மேலும் கந்தகமும் அக்கினியும் வருஷிக்கப்படுகிறது.

சமபூமியின் பட்டணங்கள் அழிக்கப்பட்டன. சோதோம் கொமோரா எதனால் கட்டப்பட்டதோ அது அனைத்தும் சாம்பலாகிறது. என்றாலும், நியாயத்தீர்ப்பின் மத்தியிலும் தேவன் ஆபிரகாமை நினைவுகூர்ந்து, லோத்து குடியிருந்த பட்டணங்களை அழிக்கும்போது லோத்தைத் தப்புவிக்கிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒருபோதும் அவசரகதியில் நடைபெறுவதல்ல. **அது பொறுமை, எச்சரிக்கை மற்றும் இரக்கத்தின்** ஒரு காலத்திற்குப் பிறகே வருகிறது. ஆனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது **அது முழுமையானதாக இருக்கும்.**

நியாயத்தீர்ப்புக்கு முன்பாக எப்போதும் இரக்கம் வெளிப்படும்.

தேவன் தமது உடன்படிக்கையின் ஜனங்களை ஒருபோதும் மறப்பதில்லை.

அவர்கள் ஓடுகையில், லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்க்கிறாள். அந்த நிமிடமே, அவள் உப்புத்தூணானாள். அவளுடைய சரீரம் சோதோமை விட்டு வெளியேறியது, ஆனால் அவளுடைய இருதயம் அங்கேயே தங்கிவிட்டது. தேவன் அழித்துக்கொண்டிருந்த ஒன்றை அவள் நேசித்தாள்.

அவளுடைய சரித்திரம் உலகத்தை நேசிப்பதற்கெதிராக ஒவ்வொரு தலைமுறைக்குமான ஒரு எச்சரிக்கையாகும். **கீழ்ப்படிதலுள்ள ஓர் இருதயம் உலகத்தின்மேலும் தேவன்பேரிலும் இணைந்திருக்க முடியாது.**



"அவளுடைய இருதயம் சோதோமில்தான் இருந்தது. அவளுடைய சரீரம் வெளியே நடந்தாலும், அவள் தன் இருதயத்தை அங்கேயே விட்டுவிட்டாள்."

உலகத்தின் காரியங்களை விட்டுச் செல்வது உங்கள் இருதயத்தை உடைக்குமா?


நீங்கள் உலகத்தில் எவற்றோடு ஒட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை எழுதுங்கள்.

உலகத்தில் வைக்கும் மேலான அன்பு, தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பதுடன் போட்டியிடுகிறது.

பின்னிட்டுப் பார்ப்பது, இருதயம் உண்மையிலேயே எதை விரும்புகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

அதிகாலையில் ஆபிரகாம் எழுந்து சமபூமி முழுவதையும் பார்க்கிறான். அங்கே சூளையின் புகையைப்போலப் புகை எழும்புகிறதைக் காண்கிறான். லோத்துக்காக அவன் துக்கப்பட்டாலும், அவனுடைய இருதயம் உறுதியாக இருக்கிறது. அவன் தன் வாழ்க்கையை சோதோமில் முதலீடு செய்யவில்லை. அவனுடைய நம்பிக்கை அவனை மீட்கப்போகிற தேவன்மேல் மாத்திரமே வைக்கப்பட்டிருந்தது.

நான்கு வகையான மனிதர்கள் நமக்கு முன்பாக நிற்கிறார்கள்:



இறுதியில் லோத்துக்கு நேரிட்ட துயரம்


ஆதியாகமம் 19:30-38

லோத்து உயிர் தப்புகிறான், ஆனால் அவனுடைய வாழ்க்கையோ இழப்புகளுக்கு அடையாளமாகிவிட்டது.



லோத்து **உயிர்தப்பினாலும் உலகத்தோடு சமரசம் செய்துகொண்டதன் தீய விளைவுகளை அது அழித்துவிடாது** என்பதற்கு வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள மிகவும் எச்சரிக்கையான பகுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

சோவாரிலே குடியிருக்கப் பயந்து, லோத்து தன் இரண்டு குமாரத்திகளோடு மலைக்குச் சென்று ஒரு குகையிலே தங்குகிறான்.



சோதோமின் ஒழுக்கக்கேடு என்னும் இருளினால் வடிவமைக்கப்பட்ட லோத்தின் குமாரத்திகள், தங்கள் வம்சத்தின் பிழைப்பு என்பது தேவனுடைய வாக்குத்தத்தத்தை விட மனித முயற்சியில்தான் இருக்கிறது என்று நம்புகிறார்கள்.

தேவனை நம்புவதற்குப் பதிலாக, அவர்கள் சூழ்ச்சியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

காத்திருப்பதற்குப் பதிலாக, அவர்கள் செயல்பட்டார்கள்.

விசுவாசத்திற்குப் பதிலாக, அவர்கள் பயத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அதன் விளைவாக முறையற்ற உறவு, அவமானம் மற்றும் தலைமுறைகளாகத் தொடரும் மோதல்கள் உண்டாயின.

இந்த உறவினால் பிறந்த குமாரர்களாகிய மோவாபும் பென்னம்மியும், தேவனுடைய ஜனங்களுக்கு நீண்டகால எதிரிகளாகிய மோவாபியரும் அம்மோனியருமாக மாறினார்கள். இதன் விளைவுகள் பல தலைமுறைகள் கடந்தபின்னரும் தொடர்ந்து ஏற்படுத்திக்கொண்டேயிருக்கின்றன.

லோத்தின் சரித்திரம் கலகத்தில் முடிவடையவில்லை. அது வருத்தத்தில் முடிவடைகிறது.

அவன் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பினான், ஆனால் தன் செல்வாக்கை இழந்தான். லோத்து யாரையாவது தேவனிடத்திற்கு வழிநடத்தினான் என்று வேதாகமம் எங்கும் பதிவு செய்யவில்லை. அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டினான் என்றும் பதிவு செய்யவில்லை. தேவன் அவனிடம் மீண்டும் பேசினார் என்றும் பதிவு செய்யவில்லை. ஆனாலும் அவன் இரட்சிக்கப்பட்டான்.

லோத்து ஒரு நீதிமான் என்றும், தன்னைச் சுற்றியிருந்தவர்களின் அக்கிரமச் செய்கைகளினால் அவனுடைய நீதியுள்ள இருதயம் வாதிக்கப்பட்டது என்றும் பேதுரு பின்பு நமக்குச் சொல்கிறார் (2 பேதுரு 2:6-8). இருப்பினும் கீழ்ப்படிதல் இல்லாத நீதி, பிரித்தெடுக்கப்படாத உணர்வு, தைரியமில்லாத விசுவாசம் ஆகியவை பேரழிவான விளைவுகளுக்கே வழிவகுத்தது.

அவன் இரட்சிக்கப்பட்டான், ஆனால் தப்பினதுபோலத் தப்பினான். அவனுடைய குடும்பம், செல்வாக்கு மற்றும் சாட்சி அழிந்துபோனது.

ஆதியாகமம் 19-ஐ வைத்து மட்டும் இதைப் பகுத்தறிவது கடினம் என்றாலும், 2 பேதுரு 2:6-8-லிருந்து லோத்து இரட்சிக்கப்பட்டான் என்பதை நாம் அறிவோம். ஆனால் நம் வாழ்வில் நாம் அறிக்கையிட்டு விட்டுவிடாத பாவம், முடிவில் துக்கத்தையே கொண்டுவரும்.



நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை
ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“தங்கள் வாழ்வின் பாவங்களை நியாயந்தீர்க்காத அநேக மக்களின் சித்திரமாக லோத்தின் வாழ்க்கை இருக்கிறது. அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் “அக்கினியில் அகப்பட்டுத் தப்பினதுபோல” இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி உலக காரியங்களில் தங்களது அனைத்தையும் வைத்திருக்கும் மக்களிடம் கர்த்தர் மிகத் தெளிவாகக் கூறுவது என்னவென்றால்: அவர்கள் இங்கு தங்கள் பாவத்தை நியாயந்தீர்க்காமல் விட்டால், அவர் அதை நியாயந்தீர்ப்பார்.”


தீர்க்கப்படாத பாவம்
ஆதியாகமம் 20

தீர்க்கப்படாத பாவம்


அன்புள்ள பரலோக பிதாவே,

ஆண்டவரே, நாங்கள் இந்த அதிகாரத்தை தியானிக்கையில், எங்களுக்கு உண்மையான இருதயத்தைத் தந்தருளும். வெளிப்படையான பாவங்களை மாத்திரமல்லாமல், நாங்கள் நியாயப்படுத்தப் பழகிவிட்ட எங்கள் பாவ சுபாவங்களையும் எங்களுக்குக் காண்பித்தருளும். உம்மை முழுமையாக விசுவாசிக்கவும், எங்கள் வாழ்வில் உம்முடைய ஆசீர்வாதத்தைத் தடைசெய்யும் எதையும் உண்மையோடு கையாளவும் எங்களுக்குப் போதித்தருளும். உமக்கு முன்பாக உத்தமமாய் நடக்க எங்களை ஆயத்தப்படுத்தும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

பாதி உண்மை

ஆதியாகமம் 20



"நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லுகிறேன்: நீங்களும் நானும் நம்முடைய வாழ்க்கையில் உள்ள பாவத்தை அறிக்கையிட்டு விட்டுவிட மனதில்லாதிருக்கும் வரை, நமக்கு எந்த ஆசீர்வாதமும் இல்லை."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ

ஆதியாகமம் 20: சுருக்கமான பார்வை

சூழ்நிலை

ஆபிரகாம் மீண்டும் அதே பொய்யைச் சொல்லுகிறான்.

சாராள் மீண்டும் ஆபத்தில் சிக்குகிறாள்

மீண்டும் ஒருமுறை, தேவன் தலையிட வேண்டியதாகிறது.



செயல்பாடு




இந்த சமயத்தில், ஆபிரகாமுக்கு ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது தேவனின் தெளிவான நோக்கமாக இருந்தது.

முடிவு

ஆபிரகாம் மீண்டும் பாவத்தில் விழுந்தான், தேவன் அதை அனுமதிக்கிறார்.

தேவன் புதிய ஜீவனை கொண்டுவருவதற்கு முன்பாக,

ஆபிரகாமின் பாவத்தை அவர் கையாளுவதைக் காண்கிறோம்.



ஆதியாகமம் 20-ஆம் அதிகாரத்தை முதல் முறை வாசிக்கும்போது, இது நமக்கு மிகவும் பரிச்சயமான, அசௌகரியமான, அல்லது மீண்டும் மீண்டும் வருகிற ஒரு சம்பவமாகத் தோன்றுவதால், இதைத் தவிர்த்துவிட்டுப் போகலாம் என்று நாம் நினைக்கலாம். ஆயினும், தேவன் இங்கே ஒரு நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆபிரகாமின் வீழ்ச்சியிலும்கூட, தேவன் அவனுடைய மறைவான பாவத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து, தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக அவனை ஆயத்தப்படுத்துகிறார்.

தேவன் கடைசியாகத் தன்னோடு பேசின இடத்திலிருந்து ஆபிரகாம் தெற்கே கேராரை நோக்கிப் பிரயாணம்பண்ணினான். மீண்டும் ஒருமுறை பயம் அவனுடைய தீர்மானங்களை ஆட்கொள்கிறது. அவன் கேராரின் ராஜாவினிடத்தில் சாராளைத் தன் சகோதரி என்று சொல்கிறான். பல வருடங்களுக்கு முன்பு எகிப்தில் அவன் சொன்ன அதே கதை, அதே திட்டம், அதே நியாயப்படுத்துதல், அதே பயம்.



இது தற்காலிகமான சறுக்கல் அல்ல;
இது ஒரு தொடர் வாடிக்கை.

இப்போது ஏறக்குறைய தொண்ணூறு வயதான சாராள், மீண்டும் ஒரு ராஜாவின் அரண்மனைக்குக் கொண்டு செல்லப்படுகிறாள். தேவன் தமது உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் கறைபடுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்பதால், அவர் மீண்டும் தலையிடுகிறார்.

விசுவாசத் தந்தை ஆபிரகாம், புறஜாதி ராஜாவாகிய அபிமெலேக்கைப் பார்க்கிலும் ஆவிக்குரிய ரீதியில் பலவீனமாகக் காணப்படுவது அதிர்ச்சி அளிக்கிறது. அபிமெலேக்கு தார்மீக உணர்வைக் காண்பிக்கிறான், தேவனுடைய எச்சரிப்புக்குச் செவிகொடுக்கிறான், உத்தமத்தோடு செயல்படுகிறான். ஆனால் ஆபிரகாமோ, அந்த இடத்தில் தெய்வபயம் இல்லையென்றும், சாராளின் நிமித்தம் ராஜா தன்னைக் கொன்றுபோடுவான் என்றும் நினைத்ததாகக் கூறி தன்னை நியாயப்படுத்துகிறான்.

தெய்வபயம் என்றால் என்ன? இந்தத் தருணத்தில் யாரிடம் தெய்வபயம் குறைவாக இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

தன்னுடைய வஞ்சனை திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்பதை ஆபிரகாம் ஒப்புக்கொள்கிறான். அது திடீரென்று எடுக்கப்பட்ட ஒரு முடிவல்ல. வெகு காலத்திற்கு முன்பு, தேவன் அவனை முதன்முதலில் அழைத்தபோதே, அவர்கள் எங்கே போனாலும், தன்னைத் தன் சகோதரன் என்று சாராள் சொல்லவேண்டும் என்று ஆபிரகாமும் சாராளுமாகச் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள்.

ஆபிரகாமும் சாராளுமாக உறவினர்களாக இருந்தாலும், அவர்கள் திருமணமானவர்கள் என்பதை மறைத்தார்கள். அது விசுவாசத்தினால் அல்ல, பயத்தினால் உருவான ஒரு திட்டம். தன்னைத் தற்காத்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட 'பாதி உண்மை' அது.




அந்த 'பாதி உண்மை' பல ஆண்டுகளாக அவனைத் தொடர்ந்தது.

உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் 'பாதி உண்மைகள்' இருக்கின்றனவா? அவைகளை முழு உண்மைகள் என்று உங்களை நீங்களே நம்பவைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

இந்த அதிகாரம் வேதாகமத்தில் இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு என்று வேத அறிஞர் டாக்டர் வெர்னோன் மெக்கீ கூறுகிறார்: ஆபிரகாமும் சாராளுமாக இந்தப் பாவத்தை அறிக்கையிட்டு சரிசெய்யும் வரை அவர்களால் ஈசாக்கைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அந்தச் சத்தியம் இன்றும் மாறாததாக உள்ளது.

தேவன் தமது வாக்குத்தத்தங்களைத் திரும்பப் பெறுவதில்லை, ஆனால் அவருடைய ஜனங்கள் சத்தியத்தில் நடக்க ஆயத்தமாகும் வரை, அந்த ஆசீர்வாதங்களை அனுபவிப்பதை அவர் தாமதப்படுத்தலாம்.



இந்தச் சத்தியத்தை வேதாகமம் தொடர்ந்து போதிக்கிறது. **மனந்திரும்புதலுக்குப் பின்பே ஆசீர்வாதமும், அறிக்கையிடுதலுக்குப் பின்பே மறுசீரமைப்பும், சத்தியத்திற்குப் பின்பே வளர்ச்சியும்** உண்டாகிறது. விசுவாசிகள் தங்களைத்தாமே நிதானித்து அறியத் தவறும் போது, தேவன் அவர்களை அழிப்பதற்காக அல்ல, அவர்களைச் சீர்ப்படுத்துவதற்காகவே சிட்சிக்கிறார் என்று பவுல் கொரிந்திய சபைக்கு எழுதுகிறார். *(1* கொரிந்தியர் *11:28-32)*

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே தொடங்கும்; ஏனெனில், **தேவன் தமது ஜனங்கள் மாறாமல் அப்படியே இருப்பதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்**.



மேலோட்டமான கீழ்ப்படிதலில் தேவனுக்கு விருப்பமில்லை என்பதை இந்த அதிகாரம் நமக்கு அமைதியாக நினைவூட்டுகிறது.

அவர் **இருதயத்தின் உத்தமத்தையே** விரும்புகிறார். அவர் **நீடிய பொறுமையுள்ளவர்,** அதேசமயம் **காரணத்தோடே எல்லாவற்றையும் செய்கிறவர்**.

சில நேரங்களில் நாம் அனுபவிக்கும் தாமதம் என்பது, **தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறுத்தி வைப்பதல்ல**; மாறாக, நாம் வெகுகாலமாகச் சுமந்து திரியும் சில காரியங்களை அவரிடம் **ஒப்புக்கொடுக்கும்படி** அவர் விடுக்கும் அழைப்பேயாகும்.

ஈசாக்கு பிறப்பதற்கு முன்பாக, ஆபிரகாம் தான் இதுவரை தவிர்த்து வந்த தன் பாவத்தை எதிர்கொள்ள வேண்டியதிருந்தது.



தேவன் நம் வாழ்வில் புதிய கனிகளைக் கொண்டுவருவதற்கு முன்பாக, நாம் நம்முடைய கவலைகளையும் பாரங்களையும் அவரிடம் ஒப்புக் கொடுக்கும்படி அவர் அடிக்கடி நம்மிடம் கேட்கிறார்.

சிந்தித்தல்

கேள்வி 1

உங்கள் வாழ்க்கையில் தேவனை முழுமையாக விசுவாசிப்பதற்குப் பதிலாக, எந்தப் பகுதிகளில் நீங்கள் பயத்திற்கு இடமளிக்கிறீர்கள்?

கேள்வி 2

உங்களுக்குப் பழக்கப்பட்டவை அல்லது பாதுகாப்பானவை என்று நினைத்து, நீங்கள் சமரசம் செய்துகொண்டு ஏற்றுக்கொண்ட பாவ சுபாவங்கள் ஏதேனும் உள்ளனவா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக, பயத்திற்கு இடங் கொடுக்காமல், உங்கள் வாழ்க்கையில் உள்ள எந்தப் பாதி உண்மைகளை அல்லது பாவங்களை நீங்கள் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை
ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“நம்முடைய வாழ்க்கையிலுள்ள பாவத்தை நாம் அறிக்கையிட்டு சரிசெய்யாதபடியால், சபைகளுக்கும் அநேக விசுவாசிகளின் வாழ்க்கைகளுக்கும் வரவிருக்கும் ஆசீர்வாதங்கள் தடைப்பட்டிருக்கின்றன. ஆதியாகமம் இருபதாம் அதிகாரத்தில் இது ஒரு மாபெரும் ஆவிக்குரிய பாடமாக அமைந்திருக்கிறது.”


வாக்குத்தத்தம்
நிறைவேறியது
ஆதியாகமம் 21

வாக்குத்தத்தம் நிறைவேறியது

அன்புள்ள பரலோக பிதாவே,

ஆண்டவரே, நீர் உரைத்த ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்றுவதற்காக உமக்கு நன்றி. இந்த அதிகாரத்தை நாங்கள் தியானிக்கையில், உமது குறிக்கப்பட்ட காலத்தையும், மரணத்தில் இருந்து ஜீவனை உருவாக்கும் உமது வல்லமையையும், முதிர்ச்சிக்கும் கீழ்ப்படிதலுக்கும் எங்களை அழைக்கும் உமது ஞானத்தையும் காண எங்களுக்கு உதவிசெய்யும். உம்மை முழுமையாக விசுவாசிக்கவும், ஆவிக்குரிய குழந்தைப் பருவத்தைத் தாண்டி வளரவும், உம்முடைய வாக்குத்தத்தங்களின் விடுதலையில் நடக்கவும் எங்களுக்குப் போதித்தருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

ஈசாக்கின் பிறப்பு

ஆதியாகமம் 21:1-7



"ரோமர் நான்காம் அதிகாரத்தில் பவுல் இவ்விதமாக எழுதுகிறார்: ஆபிரகாம் 'தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்' (ரோமர் 4:19). மரணத்திலிருந்து தேவன் ஜீவனைக் கொண்டுவருகிறார்: இது ஓர் அற்புதமான பிறப்பு."

– டாக்டர் வெர்னோன் மெக்கீ



நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலோடு ஆதியாகமம் 21-ஆம் அதிகாரம் தொடங்குகிறது.

முந்தைய அதிகாரத்தில், **வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளை பிறப்பதற்கு** முன்பாக ஆபிரகாமின் பாவம் சரிசெய்யப்பட வேண்டியதாயிருந்தது.

இப்போது அதற்கான காலம் வந்துவிட்டது. கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடியே **சாராளைச் சந்தித்து, தாம் உரைத்தபடியே கர்த்தர் சாராளுக்குச் செய்தார்**. தேவன் குறித்த காலத்திலே **சாராள் கர்ப்பவதியாகி, ஆபிரகாமுக்கு அவனுடைய முதிர்வயதிலே ஒரு குமாரனைப் பெற்றாள்**. தேவன் தமது வார்த்தையைக் காத்துக்கொண்டார்.

ஈசாக்கின் பிறப்பிற்கும் கிறிஸ்துவின் பிறப்பிற்கும் இடையே ஒரு **குறிப்பிடத்தக்க ஒப்புமை** உள்ளது. **தேவன் வாக்குத்தத்தம்** பண்ணியிருந்த குறிக்கப்பட்ட காலத்திலே ஈசாக்கு பிறந்தான். அதேபோல, "**காலம் நிறைவேறினபோது தேவன் தமது குமாரனை அனுப்பினார்**" என்று வேதம் நமக்குச் சொல்கிறது (கலாத்தியர் 4:4).

தேவனுடைய **கட்டளைக்கு கீழ்ப்படிந்து** ஆபிரகாம் தன் குமாரனுக்கு **ஈசாக்கு என்று பேரிட்டு**, எட்டாம் நாளிலே அவனுக்கு **விருத்தசேதனம்** பண்ணினான்.

ஆபிரகாமுக்கு **நூறு வயதாயிருந்தது**, அப்போது சாராள்: "**தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்; இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்**" என்றாள் (ஆதியாகமம் 21:6). ஒரு காலத்தில் **சாத்தியமற்றதாகத் தோன்றிய ஒன்று இப்போது உண்மையாகிவிட்டது.**



இது இயற்கைக்கு அப்பாற்பட்ட, அற்புதமான ஒரு பிறப்பு. ஆபிரகாமின் சரீரம் **செத்துப்போனது** என்றும், சாராளின் கர்ப்பம் **செத்துப்போனது** என்றும் விவரிக்கப் பட்டுள்ளது (ரோமர் 4:19). ஆயினும் அந்த **மரணத்திலிருந்து தேவன் ஜீவனைக் கொண்டுவந்தார். கன்னி மரியாளின்** மூலமாக கிறிஸ்து பிறப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே, **ஜீவன் இல்லாத இடத்தில் ஜீவனை உருவாக்கத் தம்மால் முடியும்** என்பதை விளக்குவதன் மூலம், **தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியத்திற்காக மனிதகுலத்தை ஆயத்தப்படுத்தினார்.**

தங்களால் **ஒன்றுமே செய்ய முடியாது** என்பதை **உணரும்** ஒரு நிலைக்கு **ஆபிரகாமும் சாராளும்** வர வேண்டியதிருந்தது. ஈசாக்கின் பிறப்பு **மனிதனுடைய சாதனையல்ல, அது தெய்வீகத் தலையீடு.**

அது முழுமையாக தேவனுடைய செயல்.

ஈசாக்கு கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளமாயிருக்கிறார்

ஈசாக்கிற்கும் கிறிஸ்துவிற்கும் இடையிலான ஒப்புமைகள் வியக்கத்தக்கவை:



இரண்டு பிறப்புகளும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவை.



வாக்குத்தத்தத்திற்கும் நிறைவேறுதலுக்கும் இடையே ஒரு நீண்ட கால இடைவெளி இருந்தது.



இரண்டு அறிவிப்புகளும் சாத்தியமற்றவையாகவே தோன்றின.



இருவருக்கும் பிறப்பதற்கு முன்னதாகவே பெயரிடப்பட்டது.



இருவரும் தேவனால் குறிக்கப்பட்ட காலத்தில் பிறந்தார்கள்.



இரண்டு பிறப்புகளும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதமானவை.



இரண்டு குமாரர்களும் தங்கள் பிதாக்களுக்குப் பிரியமானவர்களாக இருந்தார்கள்.



இருவரும் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவர்களாக இருந்தார்கள்.



“செத்துப்போன” கர்ப்பத்திலிருந்து ஈசாக்கு பிறந்தது, மரணத்திலிருந்து ஜீவன் வரும் உயிர்த்தெழுதலுக்கு ஒரு சித்திரமாக இருக்கிறது.

எந்தவித முன்னறிவிப்புமின்றி தேவன் கன்னிப்பிறப்பைத் திடீரென்று அறிமுகப்படுத்தவில்லை. ஈசாக்கு மற்றும் பிற அற்புதமான பிறப்புகளின் மூலம், அவர் எப்படிச் செயல்படுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள தேவன் மனிதகுலத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.



சிந்தித்தல்

கேள்வி 1

ஈசாக்கின் பிறப்பு மனிதனால் சாத்தியமானது என்பதைக் காட்டிலும் அது அற்புதமானது என்பதைத் தெளிவாகக் காட்டுவது எது?

கேள்வி 2

ஆதியாகமம் 21:1-இல், “தாம் சொல்லியிருந்தபடியே... தாம் உரைத்தபடியே” என்று திரும்பத் திரும்பச் சொல்வது தேவனுடைய சுபாவத்தைக் குறித்து என்ன வெளிப்படுத்துகிறது?

கேள்வி 3

என் சுயமுயற்சியைச் சாராமல் தேவனுடைய வல்லமையை முற்றிலுமாக நம்புவதற்கு, என் வாழ்வில் “முடிந்து போனதாகத்” தோன்றும் சூழ்நிலை எது?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

ஆகாரும் இஸ்மவேலும் துரத்திவிடப்படுதல்

ஆதியாகமம் 21:8-33

"நீங்கள் எந்த சுபாவத்தின்படி வாழப்போகிறீர்கள் என்பதை முடிவு செய்ய வேண்டிய நேரம் ஒன்று வரும். கர்த்தருக்குக் கீழ்ப்படிவது என்ற விஷயத்தில் நீங்கள் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். ஒன்று, உங்கள் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட நீங்கள் அனுமதிக்க வேண்டும், அல்லது மாம்சத்தால் கட்டுப்படுத்தப்பட்டு உங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும். தேவனுடைய பிள்ளைக்கு மூன்றாவது மாற்று வழி எதுவும் இல்லை."



இஸ்மவேல் பரியாசம்பண்ணுகிறதைச் சாராள் கண்டபோது, வீட்டிலிருந்த சந்தோஷம் விரைவில் **மோதலாக மாறியது**. ஈசாக்கின் வருகை இஸ்மவேலின் உண்மையான சுபாவத்தை வெளிப்படுத்தியது.

இந்தச் சம்பவம் விசுவாசிக்குள் **பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும்** இடையே நடக்கும் உள்ளான போராட்டத்தை விளக்குகிறது. மனந்திரும்புதலுக்கு முன்பாக, ஒரு நபர் **பழைய சுபாவத்தின் கட்டுப்பாட்டின்** கீழ் வாழ்கிறான். ஆனால் ஒருவர் **மறுபடியும் பிறக்கும்போது, புதிய சுபாவத்தைப் பெறுகிறான்**, அங்கே போராட்டம் தொடங்குகிறது. **மாம்சமும் ஆவியும் ஒன்றோடொன்று ஒத்துப்போவதில்லை**.

விசுவாசிக்கு **மூன்றாவது மாற்று வழி எதுவும் இல்லை**. எந்த சுபாவம் **ஆளுகை செய்யும் என்பதை ஒருவன் தேர்ந்தெடுத்தாக** வேண்டும். இரண்டின்படியும் வாழ முயற்சிப்பது **நிலையற்ற தன்மைக்கே** வழிவகுக்கும். **எதிரெதிர் திசைகளில் இழுக்கும் இரண்டு குதிரைகளைப்போல, மாம்சமும் ஆவியும் ஒன்றாகப் பயணிக்க முடியாது. விசுவாசி தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, நியாயப்பிரமாணம்** செய்ய முடியாததை **பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்ற அனுமதிக்க** வேண்டும்.



என் மாம்சமும் பரிசுத்த ஆவியானவரும் எதிரெதிர் திசைகளில் இழுக்கும்போது, தேவனுக்கு என்னை முழுமையாக ஒப்புக் கொடுக்க நான் எடுக்கக்கூடிய நடைமுறைப் படிகள் என்னென்ன?

சாராள், இந்த **அடிமைப்பெண்ணையும் இவள் மகனையும்** புறம்பே தள்ளும், **இஸ்மவேல் ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை** என்று உறுதியுடன் ஆபிரகாமுக்கு அறிவித்தாள். இது அவனுக்கு மிகவும் **துக்கமாயிருந்தாலும்**, **"ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்"** (வசனம் 12) என்று தேவன் சாராளின் கோரிக்கையை உறுதிப்படுத்தினார். **மனித திட்டத்தின் மூலம்** பிறந்த **மகன், தெய்வீக வாக்குத்தத்தத்தின் மூலம் பிறந்த குமாரனுக்குப் பதிலாக ஒருபோதும் இருக்க முடியாது.**

ஆபிரகாம் கீழ்ப்படிந்தான். அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தித் தண்ணீரையும் கொடுத்து **ஆகாரையும் இஸ்மவேலையும் அனுப்பிவிட்டான். வனாந்தரத்தில் தண்ணீர் செலவழிந்துபோனபோது**, தன் பிள்ளை சாவதைக் காண மனமில்லாமல் **ஆகார் சத்தமிட்டு அழுதாள். தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். தேவதூதன் வானத்திலிருந்து கூப்பிட்டு**, அவளுக்கு ஆறுதல் கூறினார். தேவன் அவள் கண்களைத் திறந்தார், அப்பொழுது அவள் **ஒரு தண்ணீர் துரவைக்** கண்டு தன் பிள்ளையைக் காப்பாற்றினாள். **இஸ்மவேல் வளர்ந்து, வனாந்தரத்திலே குடியிருந்தான்.**

வேதாகமம் இஸ்மவேலின் சந்ததிக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும்கூட அச்சந்ததியினர் இன்றும் இருக்கிறார்கள். **இஸ்மவேலின் சுபாவம் அவனுடைய** சந்ததியினர் **எவ்வாறு இருப்பார்கள்** என்பதற்கு வரலாற்றிற்கு ஒரு **அடையாளமாக இருக்கிறது.** அவர்கள் பெரும்பாலும் மோதல்களில் ஈடுபடும் ஒரு ஜனமாகவே இருந்து வந்திருக்கிறார்கள். ஆபிரகாம் அவர்களைப் பிரித்து அனுப்பியபோதும், தேவன் அவர்களுக்கு இரக்கத்தைக் காண்பித்து, இஸ்மவேலையும் ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று தேவன் அறிவிக்கிறார்.



பெயர்செபாவிலே ஆபிரகாமும் அபிமெலேக்கும்

இந்த அதிகாரம் **ஆபிரகாமின் வாழ்க்கையில்** நடந்த மற்றொரு நிகழ்வோடு முடிகிறது. ஆபிரகாம் செய்கிற எல்லாவற்றிலும் **தேவன் அவனோடே இருக்கிறார்** என்பதை **அபிமெலேக்கு கண்டு கொண்டபோது**, அவனோடு **ஓர் உடன்படிக்கை செய்ய விரும்பினான்.** ஆபிரகாம் தனக்கும் தன் **சந்ததியினருக்கும் உண்மையாய் நடப்பான் என்ற உறுதிமொழியை** பெற அவன் விரும்பினான். பெயர்செபாவிலே ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. **ஆபிரகாம்** அங்கே ஒரு தோப்பை உண்டாக்கி, **நித்திய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.**

தேவன் அவனுக்கு அந்தத் தேசத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருந்தாலும், ஆபிரகாம் அதில் **ஒரு பரதேசியைப் போலவும் யாத்திரிகனைப்** போலவுமே வாழ்ந்தான். **அவன்** பெலிஸ்தருடைய **தேசத்திலே அநேக நாள் அந்நியனாய்த் தங்கினான். தேவனுடைய வாக்குத்தத்தம்** உறுதியாக நிறைவேறும், அவரது உடன்படிக்கையும் நிலையானது என்பதில் சந்தேகமில்லை. எனினும், ஆபிரகாம், **ஏற்ற காலத்தில் தமது வார்த்தையை நிறைவேற்றுகிற தேவனை விசுவாசித்து, ஒரு வழிப்போக்கனைப்** போலவே அந்த தேசத்தில் வாழ்ந்தான்.

நான் வாழும் மற்றும் வழிநடத்தும் முறையைப் பார்க்கும்போது, தேவன் என்னோடிருக்கிறார் என்பதை மற்றவர்கள் கண்டு கொள்வார்களா?



தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து ஒரு வழிப்போக்கனாக வாழ்வதற்குப் பதிலாக, இந்த உலகமே நிரந்தரம் என்பதைப்போல நான் வாழும் வழிகள் என்னென்ன?

தேவனுடைய கரம் ஒருவருடைய வாழ்க்கையின் மீது இருக்கும்போது, தேசங்கள்கூட அதைக் கவனிக்கும். தேவனை நம்பி சமாதானத்துடன் வாழ்கிற ஒருவனுடைய சாட்சியானது, அவனுடைய வார்த்தைகளைக் காட்டிலும் சத்தமாக பிறருடன் பேசக்கூடியது.



வாக்குத்தத்தம் நிறைவேறிய பிறகு ஆராதனை வருகிறது. விசுவாசத்தில் வேரூன்றிய ஆபிரகாம், தேவனுடைய உடன்படிக்கையின் கீழ் ஒரு யாத்திரிகனாக வாழ்ந்து, நித்திய தேவனைக் கூப்பிடுகிறான்.



சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

கேள்வி 1

இந்த அதிகாரத்தில், தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு அப்பால் சுயமாகச் செயல்பட ஆபிரகாமும் சாராளுமாக முன்பு எடுத்த முடிவு, குடும்பத்திற்குள் ஆழமான வலியையும், பிரிவினையையும், பிரிவையும் ஏற்படுத்தியது.

பாவமானது மன்னிக்கப்பட்டாலும், அது நம்மீது மட்டுமல்லாமல் நம்மைச் சுற்றியுள்ளவர்களிடமும் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஆகார் மற்றும் இஸ்மவேலைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன?

கேள்வி 2

விசுவாசிக்குள் இருக்கும் பழைய சுபாவத்திற்கும் புதிய சுபாவத்திற்கும் இடையிலான போராட்டத்தை இஸ்மவேல் மற்றும் ஈசாக்கின் மோதலோடு மெக்கீ ஒப்பிடுகிறார்.

எந்த சுபாவம் நம் வாழ்க்கையை ஆள வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நம்முடைய பொறுப்பைக் குறித்து இந்த உதாரணம் நமக்கு என்ன போதிக்கிறது, மேலும் நடுநிலைமையோ அல்லது சமரசம் செய்துகொள்வதோ ஏன் சாத்தியமில்லை?

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“ஒரு விசுவாசியாக நீங்கள் இரண்டு சுபாவங்களோடும் இணக்கமாக வாழ முடியாது. நீங்கள் ஒரு முடிவை எடுத்தாக வேண்டும். ‘இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்‘ (யாக்கோபு 1:8).

இன்றைய பல கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் நிலையற்ற தன்மைக்கும் பாதுகாப்பின்மைக்கும் இதுவே காரணமாகும். அவர்கள் உலகத்தோடும் சேர்ந்து செல்ல விரும்புகிறார்கள், அதேசமயம் கர்த்தரோடும் செல்ல விரும்புகிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் இருமனம் கொண்டவர்கள், இரண்டையும் செய்ய முற்படுகிறார்கள்; ஆனால் உங்களால் அப்படிச் செய்ய முடியாது.”


விசுவாசம்
சோதிக்கப்படுதல்
ஆதியாகமம் 22 - 23

விசுவாசம் சோதிக்கப்படுதல்

அன்புள்ள பரலோக பிதாவே,

ஆண்டவரே, மெய்யான விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கும் என்று எங்களுக்குப் போதித்தருளும். உம்முடைய வழிகளை நாங்கள் புரிந்துகொள்ள முடியாதபோது, உம்மை விசுவாசிக்க எங்களுக்கு உதவிசெய்யும். உமக்கு முழுமையாய்க் கீழ்ப்படிகிற இருதயத்தையும், நீர் எப்போதும் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வீர் என்று நம்புகிற மனதையும் எங்களுக்குத் தந்தருளும். உம்முடைய வார்த்தையினாலே எங்களைப் பலப்படுத்தியருளும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

சோதனையும் பயணமும்

ஆதியாகமம் 22:1-8



“உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே... அவனைத் தகனபலியாகப் பலியிடு...”

- ஆதியாகமம் 22:2-3

இந்த அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமுக்கு ஏழாவதும் இறுதியுமாகத் தரிசனமாகி, அவனுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய சோதனையை அவனுக்கு வைக்கிறார்.

ஆதியாகமம் 22:2**-ல் கொடுக்கப்பட்டுள்ள அழுத்தத்தைக் கவனியுங்கள்:**

உன் புத்திரன்

உன் ஏகசுதன்

உன் நேசகுமாரன்





இயேசு

(வாக்குத்தத்தத்தின்படி வந்த குமாரன்)

பிதாவின் நேசகுமாரன்

"'**இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்**' என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (மத்தேயு 3:17).

பிதாவாகிய தேவன் உலகத்தின் மீட்புக்காக தமது குமாரனைக் மனமுவந்து கொடுத்தார்.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" *(யோவான் 3:16).*

ஈசாக்கு

(ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணப்பட்ட மகன்)

ஆபிரகாமின் நேசகுமாரன்

"உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகன பலியாகப் பலியிடு" *(ஆதியாகமம் 22:2).*

குமாரனைப் பலியிடும்படிக் கேட்டதன் மூலமாக **தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்.**

"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, **தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்**; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: 'ஆபிரகாமே' என்றார்; அவன்: 'இதோ அடியேன்' என்றான்" *(ஆதியாகமம் 22:1).*

தேவன் பலி செலுத்துவதற்காகத் தெரிந்து கொண்ட இடமான **எருசலேமுக்குச் சமீபத்தில் இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.**

"அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்து ... கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார்" *(யோவான் 19:17)*

அநேகரால் அதைப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், **கிறிஸ்துவின் பலியானது தேவனுடைய மீட்பின் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது.**

இயேசுவின் உயிர்த்தெழுதல் மரணத்தின்மீது தேவனுடைய வல்லமையை நிரூபித்தது.

"தேவன் மரணக்கட்டுகளை அவிழ்த்து, அவரை எழுப்பினார்..." *(அப்போஸ்தலர் 2:24)*

சிலுவை மரணம் என்பது அடிப்படையில் மனித குலத்திற்கான மீட்பை நிறைவேற்றுவதற்காக **பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே நடந்த ஒரு நிகழ்வாகும்.**

இயேசு தாம் பலியிடப்படும் இடத்திற்குத் தமது சிலுவையைத் தாமே சுமந்து சென்றார்.

"அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்து கொண்டு, ... கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்" *(யோவான் 19:17)*

கிறிஸ்து தம்முடைய பலியினாலே பாவத்தின் தீர்ப்பைத் தம்மேல் ஏற்றுக்கொண்டார்.

ஈசாக்கை மோரியா தேசத்திற்குக் கொண்டு செல்லும்படி தேவன் கூறினார்; பின்நாளில் எருசலேம் அமைக்கப்பட்ட பகுதி இதுவே என்று நம்பப்படுகிறது.

"நீ ... மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" *(ஆதியாகமம் 22:2).*

ஆபிரகாம் தேவனுடைய கட்டளையை முழுமையாகப் புரிந்துகொள்ளா விட்டாலும்கூட, தேவனுடைய சுபாவத்தை நம்பிக் கீழ்ப்படிந்தான்.

தேவன் ஈசாக்கை மரித்தோரிலிருந்தும் எழுப்ப வல்லவராயிருக்கிறார் என்று ஆபிரகாம் விசுவாசித்தான்.

"தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்" *(எபிரெயர் 11:19).*

மோரியா மலையின் பலியில் ஆபிரகாமும் ஈசாக்கும் மட்டுமே கலந்துகொண்டனர். இது **தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான தனிப்பட்ட நிகழ்வு** என்பதை அடையாளப்படுத்துகிறது.

ஈசாக்கு தகனபலிக்குரிய கட்டைகளைத் தாமே சுமந்து சென்றான்.

"ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து, ..." *(ஆதியாகமம் 22:6)*

ஆபிரகாம் நெருப்பையும் கத்தியையும் ஆபிரகாம் தன் கையில் எடுத்துச் சென்றான். இது நியாயத்தீர்ப்பு மற்றும் பலியையும் அடையாளப்படுத்துகிறது.

"ஆபிரகாம் ... தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்" *(ஆதியாகமம் 22:6).*

விசுவாசம் நிரூபிக்கப்படுதலும் தேவனுடைய மாற்று ஏற்பாடும்

ஆதியாகமம் 22:9-19

இயேசு

(வாக்குத்தத்தத்தின்படி வந்த குமாரன்)

இயேசு மரணத்தை எதிர்கொண்டபோதும், பிதாவின் சித்தத்திற்கு **மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தார்**.

"பிதாவே... என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" *(லூக்கா 22:42)*

பாவத்திற்கான பரிகாரப் பலியாகக் கிறிஸ்து **தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.**

சிலுவையே கிறிஸ்துவின் தியாகத்தின் உச்சகட்ட தருணமாக அமைந்தது.

கீழ்ப்படிதலின் மூலம் தேவனுடைய மீட்பின் திட்டத்தை இயேசு நிறைவேற்றினார்.

ஈசாக்கு

(ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணப்பட்ட மகன்)

ஈசாக்கு மனப்பூர்வமாக ஆபிரகாமுக்குக் **கீழ்ப்படிந்தான்.**

ஆபிரகாம் பலிபீடத்தைக் கட்டி, ஈசாக்கை அதின்மேல் கிடத்தினான். ஈசாக்கு **ஏறக்குறைய 33-37 வயதானவனாகவும்,** எதிர்த்து நிற்கும் அளவுக்குப் பலசாலியாகவும் இருந்தபோதிலும், தன் தகப்பனின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தான்.

ஈசாக்கு தன்னை பலி பீடத்தின்மேல் கிடத்த அனுமதித்ததானது, தன் தகப்பன்மீதும் தேவன்மீதும் அவன் கொண்டிருந்த **விசுவாசத்தைக் காட்டுகிறது.**

ஆபிரகாம் கத்தியை ஓங்கியதே அந்த நெருக்கடியான நிகழ்வின் உச்சக்கட்ட தருணம்.

ஆபிரகாம் ஏற்கனவே பல விசுவாசப் பரீட்சைகளைச் சந்தித்திருந்தான்:

- சொந்த ஊரை விட்டுப் புறப்பட்டது
- லோத்தை விட்டுப் பிரிந்து சென்றது
- இஸ்மவேலை அனுப்பி வைத்தது

தேவனுடைய மாற்று ஏற்பாடு:

பதிலாள் மரணம்

இயேசு மனிதகுலத்தின் பாவத்திற்கான மெய்யான மாற்றுப்பலியாக மாறினார்.

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!" *(யோவான் 1:29)*

முந்தைய பலிகள் எதற்கு அடையாளமாக இருந்தனவோ, அதை நிறைவேற்றும் வகையில் **கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார்.**

சிலுவை மரணத்தின் வெகு காலத்திற்கு முன்னரே தேவ ஆட்டுக்குட்டியானவர் முன்னறிவிக்கப்பட்டார்.

இதோ,
உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டி!
யோவான் 1:29

ஈசாக்குக்குப் பதிலாக ஓர் ஆட்டுக்கடா மாற்றுப்பலியாகக் கொடுக்கப்பட்டது.

"ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, **பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக்** கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப்பிடித்து, அதைத் தன் **குமாரனுக்குப் பதிலாகத் தகன பலியிட்டான்**" *(ஆதியாகமம் 22:13)*.

ஈசாக்கு மரிக்க வேண்டிய இடத்தில் ஆட்டுக்கடா மரித்தது. இது **'பதிலாள் மரணம்' என்ற கொள்கையை** அறிமுகப்படுத்தியது.

தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக்கொள்வார்" (ஆதியாகமம் 22:8) என்ற ஆபிரகாமின் வார்த்தை பின்னர் வரப்போகிற கிறிஸ்துவை தீர்க்கதரிசனமாக சுட்டிக்காட்டுகிறது.

"**தேவன்** தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் **பார்த்துக்கொள்வார்.**"

இந்த வார்த்தை, தீர்க்கதரிசனமாகக் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டியது.



ஆபிரகாம் அந்த இடத்திற்கு **யெகோவாயீரே, அதாவது கர்த்தர் பார்த்துக்கொள்வார்** என்று பேரிட்டான்.

"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்..." *(ஆதி. 22:18)*

என்று கூறி தேவன் தமது உடன்படிக்கையை **அவனுக்கு உறுதிப்படுத்தினார்**.

சிந்தித்தல்

கேள்வி 1

தேவன் ஏன் ஆபிரகாமை இவ்வளவு வேதனையான வழியில் சோதிக்க வேண்டும்? (வாசியுங்கள்: ரோமர் 4:1-3, யாக்கோபு 2:21).

கேள்வி 2

ஆபிரகாமின் உடனடியான கீழ்ப்படிதல் அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்து என்ன வெளிப்படுத்துகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

தேவனுக்குக் கீழ்ப்படிவது என்று வரும்போது உங்களுடைய தனிப்பட்ட அனுபவம் என்ன?



"ஏதேன் தோட்டம் தொடங்கி கிறிஸ்துவின் சிலுவை வரைக்கும், அவர் வருவதைச் சுட்டிக்காட்டும் இந்தச் சிறிய மிருகங்களே மாற்றுப் பலியாக இருந்தன. தேவன் மனித பலியை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். ஆனால் அவருடைய சொந்தக் குமாரன் உலகத்திற்கு வந்தபோது, குமாரன் தாமே சிலுவைக்குச் சென்று மரித்தார்."

சாராளின் மரணமும் ஆபிரகாமின் துக்கமும்

ஆதியாகமம் 23:1-20

ஆதியாகமம் 23-ஆம் அதிகாரம் சாராளின் மரணப் பதிவுடன் தொடங்குகிறது.

சாராள் **127 ஆண்டுகள்** உயிரோடிருந்தாள். ஈசாக்கு பிறந்தபோது அவளுக்குத் **தொண்ணூறு வயது** (ஆதியாகமம் 21:7). அவள் மரிக்கும்போது ஈசாக்குக்கு ஏறக்குறைய **முப்பத்தேழு வயது**.



அவளுடைய மரணம், தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த கானான் தேசத்திலுள்ள **எபிரோனிலே** நிகழ்ந்தது (ஆதியாகமம் 12:7; 13:15).

ஆபிரகாம் தன் மனைவிக்காக மிகவும் **புலம்பி அழுதான்**. அந்தத் துயரமான நேரத்திலும், ஆச்சரியமான ஒரு காரியம் வெளிப்படுகிறது. அதாவது தேவன் தன் சந்ததியினருக்கு **வாக்குத்தத்தம் பண்ணியிருந்த** அந்தத் தேசத்தில் ஆபிரகாமுக்குச் **சொந்தமாக ஒரு துண்டு நிலம்கூட இல்லை**. எனவே சாராளை அடக்கம்பண்ண அங்கே அவன் ஒரு **காணியாட்சியை விலைக்கு வாங்க வேண்டியதிருந்தது**.

அங்குள்ள **குடிகளிடத்தில் கல்லறைக்கான நிலத்தை** ஆபிரகாம் கேட்டபோது, அவர்கள் அவனைக் **கனம்பண்ணி அந்த நிலத்தை இலவசமாகக் கொடுக்க முன்வந்தார்கள்**. ஆனால் அவன் அதற்கான **நியாயமான விலையைப் பேசி,** அவர்களிடம் அந்த நிலத்தை **விலைக்கு வாங்கினான்**.

ஆபிரகாம் **குறித்த காலத்திற்கு முன்னதாகவே தேசத்தைச் சுதந்தரிக்க விரும்பவில்லை**. தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வரை, **தனக்குத் தேவையானதை விலைக்கு வாங்கி, தேவனுடைய காலத்திற்காகக் காத்திருக்க ஆபிரகாம் ஆயத்தமாயிருந்தான்**.

ஆபிரகாம் சாராளை அந்த தேசத்தில் அடக்கம்பண்ணிய நிகழ்வு, **தேவனுடைய வாக்குத்தத்தம் ஒருநாள் நிச்சயமாய் நிறைவேறும்** என்பதில் **ஆபிரகாம் கொண்டிருந்த ஆழமான விசுவாசத்தை வெளிப்படுத்தியது**.



> சாராள் அடக்கம்பண்ணப்பட்டதில் தேவனோடு தொடர்பில் இரண்டு மகத்தான நம்பிக்கைகளும், இரண்டு மகத்தான நோக்கங்களும் இருந்தன. அதாவது ஆபிரகாமுக்கு ஒரு பூலோக நோக்கமும், ஒரு பரலோக நோக்கமும் இருந்தது.

பின்னாட்களில், இயேசு தம் சீஷர்களுக்கு **மற்றொரு வாக்குத்தத்தத்தை வெளிப்படுத்தினார்**:

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்" *(யோவான் 14:1-3).*

இந்த வாக்குத்தத்தம் **கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கிறவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டுள்ள பரலோக நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது**.

எனவே, **சாராளின் அடக்கம்** என்பது வெறுமனே **ஒரு இறுதிச்சடங்கு ஏற்பாடு மட்டுமல்ல, அது தேவனுடைய எதிர்கால வாக்குத்தத்தங்களையும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையையும்** சுட்டிக்காட்டும் ஒரு விசுவாசத்தின் செயலாகும்.



சிந்தித்தல்

கேள்வி 1

ஆபிரகாம் தன்னை ஒரு “பரதேசியும் அந்நியனுமாய்” அழைத்துக்கொள்வது, இந்த உலகத்தில் விசுவாசத்தோடு வாழ்வதைக் குறித்து நமக்கு என்ன போதிக்கிறது?

கேள்வி 2

ஆபிரகாமின் பொறுமை, தன் சொந்த கைகளில் காரியங்களை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, தேவனுடைய காலத்தின்மீது அவன் கொண்டிருந்த விசுவாசத்தை எவ்வாறு காட்டுகிறது?

தேவனை நம்புவதற்குப் பதிலாக நீங்கள் சொந்தமாக உங்கள் கைகளில் காரியங்களை எடுத்துக்கொள்ளும் வழிகள் எவை என்று சிந்தித்துப் பாருங்கள்.

செயல்படுத்துதல்

கேள்வி 3

தேவனுடைய எதிர்கால வாக்குத்தத்தங்கள்மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கை, இன்று நாம் வாழும் விதத்தை எப்படி வடிவமைக்கிறது என்பதைப் பட்டியலிடுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.” இன்று கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகெங்கிலும் சென்று சேர்ந்திருக்கிறது. இன்னும் அதைக் கேட்காதவர்கள் அநேகர் இருக்கிறார்கள், நம் மத்தியிலும்கூட அது உண்மைதான். ஆயினும், அந்த ஆசீர்வாதம் சகல ஜாதிகளுக்கும் வந்திருக்கிறது. அந்த ஜாதிகளுக்குக் கிடைக்கும் ஒரே ஆசீர்வாதம் கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே வருகிறது.”


ஈசாக்குக்கு
ஒரு மனைவாட்டி
ஆதியாகமம் 24

ஈசாக்குக்கு ஒரு மணவாட்டி


அன்புள்ள பரலோக பிதாவே,

ஆண்டவரே, நாங்கள் உம்முடைய வார்த்தையைத் தியானிக்கையில், எங்கள் வாழ்வின் ஒவ்வொரு சிறு காரியங்களிலும் உம்முடைய கரத்தின் வழிநடத்துதலைக் கண்டுகொள்ள எங்களுக்கு உதவிசெய்யும். ஆபிரகாமும் அவனுடைய ஊழியக்காரனும் உம்முடைய வழிநடத்துதலை விசுவாசித்ததுபோல நாங்களும் விசுவாசிக்க எங்களுக்குப் போதித்தருளும். ரெபெக்காளைப்போல எவ்வித தயக்கமுமின்றி உமக்குக் கீழ்ப்படியும் இருதயத்தை எங்களுக்குத் தந்தருளும். உமது அழைப்பு, உமது வாக்குத்தத்தங்கள், மற்றும் உமது அன்பின் ஆழமான ஆவிக்குரிய அர்த்தத்தை நாங்கள் கண்டுகொள்ள எங்களுக்கு உதவி செய்யும்

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

ஊழியக்காரனின் பணி

ஆதியாகமம் 24:1-41



"வேதாகமத்திலுள்ள மிகவும் அழகிய அதிகாரங்களில் ஆதியாகமம் 24-ஆம் அதிகாரமும் ஒன்று. இதில் ஆபிரகாம் பிதாவாகிய தேவனுக்கும், ஈசாக்கு குமாரனுக்கும், ஊழியக்காரன் கிறிஸ்துவுக்கு ஒரு மணவாட்டியை அழைப்பதற்காக உலகத்திற்கு வந்திருக்கிற பரிசுத்த ஆவியானவருக்கும் சித்திரமாக இருக்கிறார்கள்."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ



ஆபிரகாம் இப்போது முதிர்வயதானவன், ஆயினும் **தேவனுடைய வாக்குத்தத்தங்கள்** இன்னும் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் குமாரனாக இருந்தாலும், **தேவனுடைய செயல் எந்தவொரு சமரசமுமின்றித் தொடர வேண்டும்** என்பதை ஆபிரகாம் அறிந்திருக்கிறான். **ஈசாக்கின் மனைவி** விக்கிரகாராதனை செய்யும் கானானியரிடமிருந்து வராமல், **ஜீவனுள்ள தேவனை அறிந்த தன் சொந்த ஜனங்களிடமிருந்தே** வர வேண்டும் என்பதில் அவன் உறுதியாக இருக்கிறான்.

வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்யும்போது, இருவரும் ஒரே நம்பிக்கையைக் கொண்டிருப்பது அவசியமான மற்றும் முக்கியமான ஒன்றா?



ஆபிரகாம் தன் வீட்டிலுள்ள எல்லாவற்றிற்கும் அதிகாரியான தன் மூத்த ஊழியக்காரனிடத்தில் **இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறான்.**

இந்த ஊழியக்காரனுக்கு தனக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பணியைக் குறித்து சில சந்தேகங்கள் இருந்தன. எனினும் இங்கு ஆபிரகாமின் விசுவாசம் **மனிதத் திட்டங்களில் அல்ல, தேவனுடைய வார்த்தையைச் சார்ந்திருந்தது.** எனவே தன்னை அழைத்த கர்த்தர் இந்தக் காரியத்தில் தன் ஊழியக்காரனையும் நடத்துவார் என்று அவன் விசுவாசித்தான். தேவன் ஆபிரகாமை எந்த தேசத்திலிருந்து அழைத்தாரோ, அதே தேசத்திற்கு ஈசாக்கைத் திருப்பக் கொண்டுபோகலாமா என்ற **ஊழியக்காரனின் எண்ணத்தை அவன் முற்றிலும் மறுத்துவிட்டான். தேவன் தன்னை எங்கே இருக்க அழைத்திருக்கிறார் என்பதை ஆபிரகாம் உறுதியாக அறிந்திருந்தான்.**

"விசுவாசம் என்பது மதியீனமான காரியமல்ல. அது ஏதோ ஒன்றின் மீது உறுதியாகச் சார்ந்திருப்பது. அது எப்போதுமே நியாயமானது. அது இருளில் குதிக்கும் ஒரு செயலல்ல. நடக்குமா, நடக்காதா என்று உங்கள் வாழ்க்கையைப் பணையம் வைப்பதும் அல்ல. விசுவாசம் ஒரு சூதாட்டமல்ல; அது முற்றிலும் நிச்சயமான ஒன்று."

ஒருவேளை **இந்தத் திட்டம் தோல்வியடைந்தால்**, தன் ஊழியக்காரனை அவன் செய்த ஆணையிலிருந்து விடுவிக்கும் அளவுக்கு ஆபிரகாம் தன் **விசுவாசத்தில் உறுதியாக இருந்தான்**. வேத அறிஞர் மெக்கீ கூறுவதுபோல, "**இது செயல்படாவிட்டால், தேவன் அதை வேறு வழியில் அதை நிறைவேற்றுவார்**" என்ற விசுவாசம் அவனுக்கிருந்தது.

தேவன்மீது விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக, உங்கள் வழியில்தான் காரியங்கள் நடக்க வேண்டும் என்று நீங்கள் எப்போதாவது அவரிடம் வற்புறுத்தியிருக்கிறீர்களா?

ஊழியக்காரனின் ஜெபமும் தேவனை சார்ந்திருத்தலும்

ஆதியாகமம் 24:42-61

ஊழியக்காரன் தன் எஜமானின் ஆஸ்திகளோடும், கொடுக்கப்பட்ட பொறுப்போடும், அடுத்து என்ன நடக்கும் என்ற நிச்சயமற்ற தன்மையோடும் மெசப்பொத்தேமியாவுக்கு **வந்து சேருகிறான்**. அவன் தன் **சொந்த விருப்பத்தின்படி செயல்படாமல்**, அதற்காக **ஜெபம்பண்ணி கவனமாகக் காத்திருக்கிறான்**. அவனுடைய **வேண்டுதல் மேம்போக்கானது** அல்ல; அது நற்குணம், தயவு, சுறுசுறுப்பு, உதாரகுணம் ஆகியவற்றைக் கண்டறியும் **ஒரு விருப்பத்தை வெளிப்படுத்துகிறது**.

ஊழியக்காரன் தன் ஜெபத்தை முடிப்பதற்கு முன்பாகவே அங்கு ரெபெக்காள் வந்தாள்.




அவள் மிகவும் **அழகுள்ளவளும், கற்புள்ளவளும், சுறுசுறுப்பானவளுமாக விவரிக்கப்படுகிறாள்**. ஊழியக்காரன் குடிக்கத் தண்ணீர் கேட்டபோது, அவள் உடனடியாக அவனுக்குக் குடிக்கக் கொடுத்துவிட்டு, அவனுடைய ஒட்டகங்களுக்கும் **தண்ணீர் மொண்டு ஊற்ற முன்வருகிறாள்**. ஒட்டகங்கள் அதிக அளவு தண்ணீர் குடிக்கும் என்பதால், இது மிகவும் கடினமான, ஆனால் **கனிவான ஒரு செயலாகும்.**

தேவன் தன் ஜெபத்திற்குப் படிப்படியாகப் பதிலளிப்பதை ஊழியக்காரன் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான்.

காரியங்கள் நிறைவேறும்போது, ஊழியக்காரன் அவசரப்பட்டு முன்னேறவில்லை. அவன் கர்த்தரைத் **தொழுதுகொள்ளும்படி நிற்கிறான்**. தேவனுடைய வழிநடத்துதல் **தன்னைத்தானே மேன்மைபாராட்டும்படி** செய்யாமல், **தாழ்மைக்கும் துதிக்குமே** அவனை வழிநடத்துகிறது.

இந்த அதிகாரத்தில் திரும்பத் திரும்ப வரும் முறைமை:



ரெபெக்காள் ஓடிப்போய், இந்த அந்நியனைக் குறித்துத் தன் வீட்டாருக்கு அறிவிக்கிறாள். அவளுடைய சகோதரன் லாபான் அந்தப் பொன் நகைகளைக் கண்டவுடன், ஊழியக்காரனைச் சந்திக்க விரைந்தான். ஊழியக்காரனும் அவனோடு வந்தவர்களும் வீட்டிற்குள் வரவேற்கப்பட்டு மிகவும் உபசரிக்கப்படுகிறார்கள்.

ஆனால், சாப்பிடுவதற்கு முன்பாகவே, தான் வந்த காரியத்தைச் சொல்ல வேண்டும் என்று ஊழியக்காரன் வற்புறுத்துகிறான். அவனுடைய சௌகரியங்களை விட அவனுடைய பணியே அவனுக்கு முக்கியமாக இருந்தது.

அவன் தன்னை "நான் ஆபிரகாமின் ஊழியக்காரன்" என்று எளிமையாக அறிமுகப்படுத்திக் கொள்கிறான். அவனுடைய பெயர் அங்கு குறிப்பிடப்படவில்லை. அதற்குப் பதிலாக, முழு கவனமும் அவனுடைய எஜமான்மீதும் எஜமானின் குமாரன்மீதுமே இருந்தது.

அவன் ஆபிரகாமின் **ஆஸ்திகளைக்** குறித்தும், ஈசாக்கின் **அற்புதமான பிறப்பைக்** குறித்தும், ஈசாக்குக்கு **உரிய சுதந்தரத்தைக்** குறித்தும் சொல்கிறான். பின்னர், ஈசாக்குக்கு ஒரு மணவாட்டியைத் தேடும்படி ஆபிரகாம் தன்னை எப்படி அனுப்பினான் என்பதையும், தண்ணீர் துரவண்டையிலே தேவன் தன் ஜெபத்திற்கு எப்படிப் பதிலளித்தார் என்பதையும் விவரிக்கிறான்.

இந்தச் சரித்திரம் ஒரு வலிமையான ஆவிக்குரிய சித்திரத்தைக் கொண்டிருக்கிறது. ஆபிரகாமின் ஊழியக்காரன் ஈசாக்குக்கு ஒரு மணவாட்டியைத் தேடி வந்ததுபோலவே, **கிறிஸ்துவுக்கு ஒரு மணவாட்டியாகிய சபையை அழைப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் உலகத்திற்கு வந்திருக்கிறார்.**

அந்த ஊழியக்காரன் தன்னைக் குறித்துப் பேசவில்லை; அவன் வேறொருவரைக் குறித்துப் பேசுகிறான்.



> தேவனுடைய ஆவியானவர் வேறொருவரைக் குறித்துப் பேசுவதற்காகவே உலகத்திற்கு வந்திருக்கிறார்.

ஊழியக்காரனின் செய்தி **குமாரனை மையமாகக்** கொண்டிருக்கிறது. அவன் **பிதாவின் ஐசுவரியத்தைக்** குறித்தும், **குமாரனின் சுதந்தரத்தைக்** குறித்தும், மணவாட்டியை அழைத்துச் செல்ல வந்ததைக் குறித்தும் பேசுகிறான்.



குடும்பத்தினர் நடந்த **எல்லாவற்றையும் கேட்ட போது**, இந்தக் **காரியம் கர்த்தரால் வந்தது** என்பதை உணருகிறார்கள். **ரெபெக்காள் ஈசாக்கின் மனைவியாக** வேண்டும் என்பதற்கு அவர்கள் சம்மதிக்கிறார்கள்.

உடனடியாக ஊழியக்காரன் மீண்டும் தலைகுனிந்து கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறான்.

பின்னர் அவன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து ரெபெக்காளுக்குக் கொடுத்து, **அவளுடைய வீட்டாருக்கும் வெகுமதிகளைக் கொடுக்கிறான்**. இந்த வெகுமதிகள், தேவனுடைய கிருபையினால் **விசுவாசிகள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களை** விளக்குகின்றன. கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம், விசுவாசிகள் **தேவனோடு சமாதானத்தையும், தேவனண்டையில் சேரும் சிலாக்கியத்தையும், சந்தோஷத்தையும், நம்பிக்கையையும், பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும்** பெற்றுக்கொள்கிறார்கள்.

ஊழியக்காரன் தன் **பணியிலேயே முழு கவனத்துடன்** இருக்கிறான். **தாமதப்படுத்த முடியாத அளவுக்கு** அவனுடைய **பணி** மிக **முக்கியமானதாக இருந்தது.**

இயேசு தம்முடைய **சீஷர்களை அழைத்தபோது** அவர்கள் உடனே கீழ்ப்படிந்ததையும், கிறிஸ்து இயேசு அருளும் கிருபையின் இரட்சிப்புக்கு **பரிசுத்த ஆவியானவர் உங்களை அழைப்பதையும்** வேத அறிஞர் மெக்கீ இதோடு ஒப்பிடுகிறார்.



> நீங்கள் போவீர்களா? அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வீர்களா? கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக விசுவாசிப்பீர்களா? என்பதே உங்கள்முன் வைக்கப்படும் கேள்வி. இது சுற்றிவளைத்துப் பேசக்கூடிய ஒன்றல்ல - ஒன்று நீங்கள் அதைச் செய்ய வேண்டும், அல்லது செய்யாமல் விட வேண்டும்.

மறுநாள் காலையில் ஊழியக்காரன் உடனே புறப்பட ஆயத்தமாகிறான். கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியதால், அவன் எந்தத் தாமதமும் செய்ய விரும்பவில்லை.

ரெபெக்காளின் வீட்டார் அவளைச் சில நாட்களேனும் தங்கும்படிக் கேட்கிறார்கள்; ஆனால் ஊழியக்காரனோ புறப்படத் துரிதப்படுத்துகிறான். இறுதியாக, அவர்கள் ரெபெக்காளைப் பார்த்து, “இந்த மனிதனோடேகூடப் போகிறாயா?” என்று ஒரு எளிமையான கேள்வியைக் கேட்கிறார்கள். அவளுடைய பதில் உடனடியாக வருகிறது: “போகிறேன்.” அவள் தயங்கவோ தாமதிக்கவோ இல்லை. அவள் ஒரு தெளிவான முடிவை எடுக்கிறாள்.



> தேவனுக்குக் கொடுக்கும் உண்மையான பதில் என்பது தயக்கமல்ல; அது ஒரு உறுதியான தீர்மானம்.

ரெபெக்காள் தன் வீட்டை விட்டுவிட்டு, ஈசாக்கைச் சந்திக்க வனாந்தரத்தின் வழியே நீண்ட பயணத்தைத் தொடங்குகிறாள். பயணத்தின்போது அவள் ஈசாக்கைக் குறித்து இன்னும் அதிகமாக அறிந்துகொள்கிறாள். அவனுடைய பிறப்பு, அவனுடைய வாழ்க்கை, மோரியா மலையில் அவன் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் ஆகியவற்றைக் குறித்து அறிந்துகொள்கிறாள்.

அவனைக் கண்ணால் காண்பதற்கு முன்பாகவே அவனைப் பற்றி அறிந்துகொள்கிறாள்.

இது விசுவாசிக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான உறவை மிகவும் ஒத்திருக்கிறது. **நாம் அவரைக் காணவில்லை, ஆயினும் அவரிடத்தில் விசுவாசமாயிருந்து, அவரிடத்தில் அன்புகூருகிறோம்.**

தேவனுடைய சித்தம் தெளிவாகத் தெரியும்போது, நான் விசுவாசத்தோடு கீழ்ப்படிகிறேனா, அல்லது தாமதிக்கிறேனா?

ஆபிரகாம்
பிதாவாகிய தேவன்

பிதாவானவர் தமது இறையாண்மையின் நோக்கத்தின்படி, தமது குமாரனுக்கு ஒரு மணவாட்டியைச் சம்பாதிக்கும்படி அனுப்புகிறார்.



ஈசாக்கு
குமாரன் (கிறிஸ்து)

குமாரன் பிதாவின் நேசகுமாரனும், சுதந்தரவாளியுமாக இருந்து, தனக்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட மணவாட்டிக்காகக் காத்திருக்கிறார். மணவாட்டி அவரிடத்திற்குக் கொண்டுவரப்படுகிறாள்; அவர் அவளைத் தேடிச் செல்லவில்லை. இவரே இந்தப் பணியின் மையமாக இருக்கிறார்.



ஊழியக்காரன்
பரிசுத்த ஆவியானவர்

மணவாட்டியைத் தேடவும், குமாரனைக் குறித்துப் பேசவும், ஆவளைப் படிப்படியாக வழிநடத்தவும் ஆவியானவர் அனுப்பப்படுகிறார். அவர் தம்மைக் குறித்துப் பேசாமல், பிதாவின் ஐசுவரியத்தையும் குமாரனின் மகிமையையும் வெளிப்படுத்துகிறார்.



ரெபெக்காள்
மணவாட்டி (திருச்சபை)

மணவாட்டி அதைக் கேட்டு, விசுவாசித்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, எவ்வித தயக்கமுமின்றி "போகிறேன்" என்று ஒரு தீர்க்கமான பதிலை அளிக்கிறாள். அவள் குமாரனைப் பார்க்கும் முன்பாகவே அவர்மேல் அன்புகூர்ந்து, விசுவாசத்தோடு அவரை நோக்கிப் பயணிக்கிறாள்.



வாக்குத்தத்தம் நிறைவேறுதலும் ஆறுதல் அளிக்கப்படுதலும்

ஆதியாகமம் 24:62-67

பயணம் அமைதியாக முடிகிறது. ஒட்டகங்கள் வரும்போது ஈசாக்கு **வெளியிலே தியானம் பண்ணிக்கொண்டிருந்தான்.** ரெபெக்காள் தன் **கண்களை ஏறெடுத்து,** தான் பின்பற்றும்படித் **தெரிந்தெடுத்தவனைக் காண்கிறாள். வாக்குத்தத்தம், கீழ்ப்படிதல், அன்பு ஆகிய மூன்றையும் தேவன் ஒன்றாக இணைக்கிறார்.**

ஈசாக்கு தன் **மணவாட்டியை ஏற்றுக்கொள்கிறான்.** தன் **தாயின் மரணத்துக்குப் பின்** இப்பொழுது **அவன் ஆறுதல் அடைகிறான். தேவனுடைய உண்மைத் தன்மை மனிதனுடைய வாஞ்சையை மிகத் துல்லியமாகச் சந்திக்கிறது.**

இந்தக் காட்சி கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டியாகிய சபைக்கும் உள்ள உறவின் அழகான ஒரு சித்திரத்தை நமக்கு அளிக்கிறது.



சிந்தித்தல்

கேள்வி 1

ஆபிரகாம் எந்தச் சமரசமும் இன்றி எதிர்காலத்தை வழிநடத்த தேவனை நம்பினான்.

உங்கள் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த நினைப்பதற்குப் பதிலாக, தேவனை முழுமையாக நம்பும்படி அவர் உங்களை எங்கே அழைக்கிறார்?

கேள்வி 2

ரெபெக்காளின் கீழ்ப்படிதலுக்கு, அவளுக்குப் பரிச்சயமான எல்லாவற்றையும் விட்டுவர வேண்டியிருந்தது.

தேவனுக்கு உண்மையாயிருப்பதற்காக, இன்று நீங்கள் எதை விட்டுவிட வேண்டியதிருக்கிறது?

கேள்வி 3

இந்த அதிகாரம் ஜெபம், குணநலன், தெளிவுடன் நடத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

இவற்றில் எந்தப் பகுதியில் நீங்கள் அதிகமாக வளர வேண்டும்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

மெக்கீயின் மேற்கோள்



“உண்மையுள்ள தேவனே, விசுவாசத்தோடு நடக்கவும், உமது வழிநடத்துதலைக் கண்டுகொள்ளவும், கீழ்ப்படிதலோடு நடந்துகொள்ளவும் எங்களுக்கு உதவி செய்யும். நாங்கள் உம்மைப் பின்பற்றும்போது எங்கள் குணாதிசயங்களை வடிவமைத்து, எங்கள் இருதயங்களை நிலைநிறுத்தும். உமது வாக்குத்தத்தங்களின்மீதான நம்பிக்கையையும், ‘நான் போகிறேன்‘ என்று சொல்லும் ஆயத்தமான மனதையும் எங்கள் வாழ்வு பிரதிபலிக்கட்டும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம் பிதாவே, ஆமென்.”

THRU the BIBLE

எங்களுடைய வேதாகமம் சார்ந்த வளங்களை
செயலிகளின் வாயிலாக படிப்பதற்கு
கீழ்க்காணும் QR Code Scan செய்யுங்கள்

THRU the BIBLE
செயலி மூலம், 200க்கும் மேற்பட்ட
மொழிகளில் கிடைக்கும்
ஒலி வடிவ வேதாகம போதனைகளைப்
பதிவிறக்கம் செய்து கேட்டுப்
பயனடையுங்கள்.

Visit ttb.bible

எங்கள் வலைத்தளத்தில் “வேதாகம
தோழன் புத்தகத் தொடரில்”, அதிக
தொகுதிகளைக் கொண்ட எங்கள்
வண்ணமயமான மின்னனுப்
புத்தகங்களைக் கண்டு வாசித்துப்
பயனடையுங்கள்.

Visit ttbsa.org